**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.595** **நாள்: 21.10.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வெளியேற்றும் பணிகள் மற்றும் மழைநீர் தேங்கக்கூடிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கோ.க.அருண்ராஜ் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கோ.க.அருண்ராஜ் அவர்கள் இன்று (21.10.2026) அதிகாலை பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வெளியேற்றும் பணிகள் மற்றும் மழைநீர் தேங்கக்கூடிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 77, டொமலலஸ் சாலை ஹஜ் கமிட்டி சந்திப்பு தாழ்வான பகுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, இப்பகுதியில் தண்ணீர் தேக்கமின்றி புதியதாக கட்டப்பட்ட மழைநீர் வடிகாலில் சீராகச் செல்வதையும், அங்கு வைக்கப்பட்ட 100 எச்.பி.மோட்டார் மூலம் தண்ணீர் மழைநீர் வடிகாலில் அகற்றப்படுவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து வார்டு 76, அங்காளம்மன் கோயில் தெருவில் மழை நீர் வெளியேறும் வடிகால்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் ஸ்டீபன்சன் சாலை செங்கை சிவம் பாலம் பகுதியிலிருந்து, ஓட்டேரி நல்லா கால்வாயில் தண்ணீர் தங்குதடையின்றி சீராகச் செல்வதைப் பார்வையிட்டு திடீர் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து இப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் வார்டு 78 க்கு உட்பட்ட தானா தெருவில் மழைநீரை வெளியேற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள 100HP மோட்டார் பம்பை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தானா தெருவில் எப்பொழுதும் மழைக் காலங்களில் மழைநீர் தேக்கம் இருக்கும் என்பதால், மழைநீர் சிறிய

அளவில் தேங்கும் பொழுதே உடனடியாக அகற்றும் வகையில் மோட்டார் பம்புகளை இயக்க அறிவுறுத்தினார்.

தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வார்டு 71 - ல் அமைந்துள்ள பெரம்பூர் சுரங்கப்பாதையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பகுதியில் தற்பொழுது லேசான மழை பெய்து வருவதால் இங்கு அமைக்கப்பட்டுள்ள 20HP திறன் கொண்ட 2 மோட்டார் பம்புகள் மற்றும் 25HP திறன் கொண்ட 1 மோட்டார் பம்பு ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். மேலும் தற்பொழுது மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் இப்பகுதியில் மழைநீர் தேங்குவதற்கு முன்பாகவே உடனுக்குடன் மோட்டார் பம்புகளை இயக்கி மழைநீரை அகற்ற அறிவுறுத்தினார். பின்னர் பேப்பர் மில்ஸ் சாலையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, இப்பகுதியில் தேங்கும் தண்ணீரை டிராக்டர் மோட்டார் மூலம் அகற்றப்படும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட 200 அடி சாலை, வீனஸ் நகர் பகுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, இப்பகுதியில் தேங்கும் தண்ணீரை அகற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மோட்டார் பம்பு அறையினையும் தண்ணீரை அகற்றும் செயல்பாட்டினையும், 120HP மோட்டார் பம்புகள் இந்த அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் கூடுதலாக தேங்கும் தண்ணீரை அகற்றுவதற்காக 100HP மோட்டார் வைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பகுதியில் தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு தண்ணீர் தேக்கமின்றி அகற்றிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச். ஆர். கௌஷிக், இ.ஆ.ப., மண்டல செய்ய பொறியாளர் திரு சதீஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**